DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

DVC.No. 6/2022 P.W.1 பரிதாபேகம் க/பெ. ஷேக் மைதீன்

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 26.11.2025.**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கானது வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்யப்பட்டு அவரால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கின் ஆணையுறுதி ஆவணமானது என்னால் படித்து பார்க்கப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னால் தாக்கல்செய்யப்பட்ட ஆணையுறுதி ஆவணத்தில் 1 வது பாராவில் திருமணத்தின் போது 15 பவுன் தங்க நகையும், ரூ.75,000/- பணமும் எனது பெற்றோர் வீட்டில் சீதனமாக செய்தார்கள் எனபதற்கு ஆதரமாக எதாவது ஆதார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எங்களுடைய திருமணம் நடைபெறுகிற ஜமாத்தில் நாங்கள் செய்கிற நகை, பணம், சீர் வரிசை பொருட்களையும் கணவர் வீட்டார் எனக்கு போடப்பட்ட நகைகளையும் பதிவு செய்திருப்பார்களா என்றால் பதிவு செய்து இருப்பார்கள். அவர் நகை போடவில்லை. ரூ1500/- மட்டும் மஹராக கொடுத்தார். ஜமாத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை எதையும் பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்லகிறேன் என்றால் சரியல்ல.

ஆணையுறுதி ஆவணத்தில் 2 வது பாராவில் எனது மாமியார் என்னை தகாத வார்த்தைகளால் பேசி என்னை அடித்தது சம்பந்தமாக ஏதாவது புகார் கொடுத்து அதற்கான ஆதார ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நகைகள் 15 பவுன் விற்று எனது கணவர் வைத்திருந்த காலி மனையில் ஓட்டு வீடு கட்டியதாக சொல்லியுள்ள நிலையில் நகைகளை விற்பனை செய்தது சம்பந்தமாக யாரிடம் எப்போது எங்கு, எவ்வளவு தொகைக்கு விற்கப்பட்டது தொடர்பான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

என்னுடைய நகைகள் எதையும் விற்றுவிட்டு வீடு கட்டவில்லை என்றும், அதனால் தான் ஆதார ஆவணங்களை எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆணையுறுதி ஆவணத்தின் 3 வது பாராவில் எனது கணவர் சேரங்குளத்தை சேர்த்த ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருந்தார் என்றும், அதனை பார்த்த அந்த ஊர்க்காரர்கள் 40, 50 பேர் எங்கள் வீட்டிற்குள் புகுந்து எனது கணவரை அடித்து சென்றுவிட்டார்கள் என்று

சொல்லியுள்ளதை பொறுத்து அந்த பெண் யார், அந்த பெண்ணின் பெயர் என்ன? பெற்றோர் அல்லது கணவர் பெயர் பற்றி கூறவில்லை என்றால் சரிதான்.

40, 50 பேர் வீட்டிற்குள் புகுந்து அடித்தது சம்பந்தமாக ஏதாவது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் நான் கொடுக்கவில்லை. அதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மன்னார்குடியில் ஒரு செவிலியருடன் தகாத தொடர்பில் வைத்துக்கொண்டு என்னை அடித்து, கொடுமைபடுத்தினார் என்பது தொடர்பாக அந்த செவிலியர் பெயர், எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விபரங்களை என்னால் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பெயர் தெரியாததால் பெயர் சொல்லவில்லை . மேற்படி சம்பவம் எந்த மாத்தில், எந்த வருடத்தில் நடைபெற்றது என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

இதனால் பெருத்த மனஉளைச்சலுக்கு ஆளான நான் பூச்சிமருந்து குடித்துவிட்டு தற்கொலைக்கு முயற்சி செயதேன் என்று சொல்லியுள்ளதை பொறுத்து எப்போது எந்த மருத்துவமனையில் எவ்வளவு நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டியிருந்தேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்கொலைக்கு முயற்சி செய்யவில்லை என்றாலும், அதனை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அது அனைவருக்கும் தெரியும். அதற்கான ஆவணங்களை எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ஆணையுறுதி ஆவணத்தின் 4 வது பாராவில் எனது கணவர் பல பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு என்னை அடித்து, கொடுமைபடுத்தியுள்ளார் என்று சொல்லியுள்ளதை பொறுத்து மற்றவர்கள் மத்தியில் என் கணவர் மீது தவறான எண்ணம் கொள்ளவேண்டும் என்பதற்காக என்னால் சொல்லப்படுகிற பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. சமூக நீதிமன்றத்தார் உத்தரவின் படி இடைக்கால ஜீவானம்ச தொகை எனது கணவர் தவறாமல் கொடுத்து வருகீறார் அதனை நான் பெற்றுக்கொண்டு வருகிறேன் என்றால் 1 மாதமோ, 2 மாதமோ இடையில் செலுத்தவில்லை.

ஆணையுறுதி ஆவணத்தில் 5 வது பாராவில் எனது கணவருடன் இருந்தபோது அவர் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருந்ததை நான் கேட்டபோது எனது கணவர் என்னிடம் நான் அப்படிதான் டி இருப்பேன். நீ யாருடி கேட்பதற்கு என்று என்னை அடித்து கொடுமை செய்வார் என்ற விபரங்கள் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் எனது பெற்றோர் வீட்டில் இருந்த என்னை சமாதானப்படுத்தி என்னை அழைத்து வந்தார் தேதி, மாதம், வருடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் நிறைய முறை ஜமாத் மூலம் பேசி அழைத்து

வந்துள்ளார். நிறைய முறை என்பது எத்தனை முறை, எத்தனை மாதங்கள், எந்த வருடம் என்பது குறித்த விபரங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் ஜமாத்தில் புகார் கொடுத்து சம்பந்தமாகவும், சமாதானம் பேசியது சம்பந்தமாகவும் எந்தவொரு ஆவணங்களை எதையும் நான் ஜமாத்தில் பெற்று வந்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்றால் 2 ஆண் குழந்தைகளும்,1பெண் குழந்தையும்.

ஆணையுறுதி ஆவணத்தில் 7 வது பாராவில் எனது கணவர் தினமும் தாம்தியத்தில் ஈடுபட என்னை கட்டாயப்படுத்தி ஈடுபடுவார் என்றும், எனது தலைமுடியை பிடித்து அடிப்பார் என்று சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யான சங்கதி என்றால் சரியல்ல.

ஆணையுறுதி ஆவணத்தில் 8 வது பாராவில் என்னை அடித்து கொடுமை செய்யும் போது எனது கணவர் கத்தியை எடுத்துக்கொண்டு அவர் கையை அறுத்து கொள்வதும், அதே கத்தியை எடுத்துக்கொண்டு என்னை கொலைசெய்துவிடுவேன் என்று மிரட்டுவதாக வாடிக்கையாக கொள்வதும், எப்போது அறுத்துக்கொண்டார், எங்கே சிகிச்சை எடுத்துக்கொண்டார் போன்ற விபரங்கள் என்னால் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தேதி குறிப்பிடவில்லை. மற்ற விபரங்கள் சொல்லியுள்ளேன். வழக்கிற்காக நடைபெறாத பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.